1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : தலைவரவர்களே, மாற்று இடம் இல்லாத காரணத்தால்தான் அந்தக் கூடத்தை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப் படும்.

கோபி சட்டமன்றத் தொகுதியில் சிறுதொழில் துவங்கும் திட்டம்

446—*வினா எண் 22658 திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கோபி சட்டமன்றத் தொகுதி யில் சிறு தொழில் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன தொழில்கள் துவங்க உள் ளது ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் வினாவிற்கு இடமில்லை என்று சொன்னார் கள். கோபி தொகுதியில் தனியாக 32 சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலேயே தலா 500 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். தொழில் மைய மேலாளர் அவர்கள் பவளமலையில் தொழில் மையம் அமைக்க, நிலத்தை ஆர்ஜிதம் செய்ய பார்வையிட்டிருக்கிறார்கள். அந்த விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் சுய, வேலை வாய்ப்பு முயற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்குத் தேவை யான எல்லா வசதிகளையும் அரசு செய்து கொடுக்கிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, பெரி யார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோபி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே தொழில் மையம் உரு வாக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே. தமிழக அரசும் மத்திய அரசும் தமிழ் நாட்டிலே சில பகுதிகளை 'பாக்வெர்டு ஏரியா' என்று அறிவித்திருக்கின்றன. அந்த வகை யில் பார்க்கும்போது கோபி சட்டமன்ற தொகுதி தொழில் வளர்ச்சியில் முன்னேறிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் தற்போது அங்கே எந்தவிதமான தொழிலும் தொடங்குவதற்கு இல்லை.

[1984 மார்ச் 24

திரு தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, தொழில்கள் தொடங்குவதற்கு உதவிக்காக வங்கிகளுக்குச் செல்கிறபோது, முறையாக அந்த வங்கிகளில் கடன் பெற வேண்டுமென்றால் மீட்டுத்தொகைக்காக ஜாமீன் கேட்கிறார்கள். ஜாமீன் கொடுக்கவில்லை என்றால், ஜாமீன் கொடுக்க நபர் இல்லை என்று சொல்லி அந்த மனுக்களை தள்ளுகிற சூழ்நிலை இருக்கிறது. அதை மறு பரிசலனை செய்து, தொழில் தொடங்குகிறவர் அதற்குத் தகுந்த முறையில் இருக்கிறதா என்பதை மட்டும் பார்த்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின், கீழ் எந்தவிதமான ஜாமீனும் வங்கிகளில் கேட்பதில்லை. இந்தத் திட்டத்தில் இல்லாமல், வேறு வகையிலே தனியாகச் தொழில் தொடங்க வேண்டுமென்று கேட்கும்பொழுது ஜாமீன் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது பற்றி.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, தங்கள் மூலம், நான் அரசாங்கத்திடம் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். நேற்றைய தினம் சென்னை உயர்நீதிமன்றம் நடைபெற இருந்த உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களை தடை செய்துள்ளது. சட்டமன்றத்திலே ஒரு முற்போக்கு நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்று கருதி, பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இறுதியாக ஒரு நிலை எடுக்கப்பட்ட பிறகு, உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் நடத்தக் கூடாது என்று தடை விதித்துள்ளது. இதற்கு முன்னால், இரண்டு, மூன்று தடவை தேர்தலுக்கான நாமினேஷன் எல்லாம் நிர்ணயிக்கப்பட்டு, அதற்குப் பிறகு தடை விதித்ததினால், மிகுந்த சிரமம் ஏற்பட்டுவிட்டது. மக்கள் மத்தியில் தேர்தல் நடக்குமா என்ற ஒரு கவலையும் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தில் இது விஷயத்தில், விரைவாக முடிவு செய்வதற்கு என்ன நடவடிக்கை உத்தேசித்திருக்கிறது ? அதற்காக என்ன கால அளவிற்குள் ஏற்பாடு செய்யப்படும் என்பதை தங்கள் மூலமாக அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறேன்.